# வீரவணக்கம்

## - தளபதி கிட்டு -

## வீரச்சாவு: 16-01-1993



தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான தளபதி கிட்டு, இந்திய அரசின் கோரச் சதியால் 16. 01. 1993 இல் வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

போர்க்களத்தில் வீரத்தளபதியாய், மதிநுட்பம் வாய்ந்த போர்த்தந்திரியாய், அரசியல் நுணுக்கம் அறிந்தவராய், அஞ்சா நெஞ்சனாய், சிறந்த நிர்வாகியாய், சித்திரக்கலைஞனாய். . . . .
நிமிர்ந்து நின்று தேசத்தை நிமிரவைக்கப் போராடிய ஒரு தீப்பிழம்பு தீயினில் கலந்தது.

கபடம், நயவஞ்சகம், சூழ்ச்சி, பேடித்தனம், சதி இன்னும் பிற அவலட்சணங்களை தன்னகத்தே கொண்ட இந்தியா, தனது தலைக்கு மேலும் ஒரு அவமானக் கிரீடத்தைச் சூடிக்கொண்டது.

திலீபன், குமரப்பா, புலேந்திரன், ஜொனி, பூபதிஅம்மா, வரிசையில் இந்திய அரசு தனது வெறித்தனமான சதிப் பசிக்கு தளபதி கிட்டுவையும் பலிவாங்கிக் கொண்டது.

சர்வதேச நாடுகளின் சமாதான யோசனைகளைக் காவியவராய் தமிழீழம் நோக்கிச் சென்ற தளபதி கிட்டுவை, அவர் சென்ற கப்பலுடன், சமாதானத்தின், அமைதியின் விரோதியான இந்திய அரசின் கடற்படை, சர்வதேசக்கடலில் வைத்து சுற்றிவளைத்தது. இந்திய கடல் எல்லைக்குள் கப்பல் கொண்டு செல்லப்பட்டது. . . . யாவும் இந்திய அரசு எதிர்பார்த்தபடியே நிகழ்ந்துவிட்டது. !

ஆனால் தமிழீழ மக்கள் எதிர்பார்த்திராதது நடந்துவிட்டது.
வீரகாவியம்தான்! என்றாலும் சோகம் கவ்விக்கொண்டது.

தளபதி கிட்டுவும்,மேலும் 9 பேரும் ....
கோரத்தீயில், ஆழக்கடலில்,முகம் காற்றுப் பெருவெளியில்
கலந்துவிட்டனர்.
எங்கள் தேசம் சிலிர்த்துக் கொண்டது.! எங்கள் தளபதி
எங்கே....?

இடிந்துபோய் உட்காரும் ஈனம் படைத்தவர்களல்லர்;
நிமிர்ந்து வாழ் என்ற வீரம் படைத்தவர்கள்!
தமிழீழம் ஓயாது! அவர் தம் புனித நினைவுடன் எதிரியின் பாசறை நோக்கி
தன் எல்லைகளை நீட்டும்!

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரித்தானியக் கிளை**